

மெட்ரோ ரெயிலில் இன்று 3-வது நாளாக இலவச பயணம் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது. வண்ணாரப்பேட்டை-விமான நிலையம் இடையே மெட்ரோ ரெயிலில் இலவச பயணம் செய்த மகிழ்ச்சியில் பயணிகள்.

## இன்றும் இலவசமாக செல்லலாம்

# மெட்ரோ ரெயிலில் ஒரேநாளில் 2.10 லட்சம் பேர் பயணம்

சென்னை, பிப்.13-

சென்னை நகரில் போக்குவரத்து நெரிசலை குறைக்க மெட்ரோ ரெயில் சேவை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**மெட்ரோ ரெயில்**

விமான நிலையம் முதல் வண்ணாரப் பேட்டை வரை முதல் வழித்தடத்திலும், சென்ட்ரல் முதல் பரங்கி மலை வரை 2-வது வழித்தடத்திலும் மெட்ரோ ரெயில் பணிகள் நடந்து வந்தன.

இதில் பணிகள் முடிந்து விமான நிலையத்தி இருந்து தேனாம்பேட்டை டி.எம்.எஸ். வரையிலும், பரங்கிமலையில் இருந்து சென்ட்ரல் வரை மெட்ரோ ரெயில் இயங்கி வந்த நிலையில் மீதமுள்ள டி.எம்.எஸ். முதல் வண்ணாரப்பேட்டை வரையிலான பணிகளும் முடிந்தது.

**இலவவச பயணம்**

இதையடுத்து கடந்த 10-ந்தேதி டி.எம்.எஸ்.- வண்ணாரப்பேட்டை மெட்ரோ சேவையை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். இதன்மூலம் மெட்ரோ ரெயில் சேவையில் முதல்கட்ட பணிகள் முழுமையாக முடிந்தது. டி.எம்.எஸ்.- வண்ணாரப் பேட்டை இடையே புதிய சேவை தொடங்கப்பட்டதை யொட்டி கடந்த 10, 11 மற்றும் 12-ந்தேதிகளில் மெட்ரோ ரெயில் அனைத்து மார்க்கங்களிலும் பொதுமக்கள் இலவசமாக பயணம் செய்யலாம் என்று மெட்ரோ ரெயில் நிர்வாகம் அறிவித் தது.

இதனால் பலர் மெட்ரோ ரெயிலில் பயணம் செய்தனர். இதையடுத்து இன்றும் மெட்ரோ ரெயிலில் பொது மக்கள் இலவசமாக பயணம் செய்யலாம் என்று மெட்ரோ ரெயில் நிர்வாகம் அறிவித்தது.

மெட்ரோ ரெயிலில் 10-ந் தேதி 67 ஆயிரம் பேரும், 11-ந்தேதி 2 லட்சம் பேரும் இலவசமாக பயணம் செய்தனர். நேற்று (12-ந்தேதி) ஒரே நாளில் 2 லட்சத்து 10 ஆயிரம் பொது மக்கள் பயணம் செய்தனர்.

**அனுபவம்**

மெட்ரோ ரெயில் கட்டணம் அதிகமாக இருப்பதாக பொதுமக்கள் கருதுகிறார்கள். இதையடுத்து மெட்ரோ நிர்வாகம் பல்வேறு சலுகைகளை அறிவித்தது. இதையடுத்து மெட்ரோ ரெயில் சேவையை ஓரளவுக்கு பொதுமக்கள் பயன்படுத்த தொடங்கி விட்டனர்.

தற்போது இலவச பயணம் என்று அறிவித் துள்ளதால் இதுவரை மெட்ரோ ரெயிலில் பயணம் செய்யாதவர்கள் கூட அதன் அனுபவம் எப்படி இருக்கிறது என்பதை உணர பயணம் செய்து வருகிறார்கள். இன்றும் லட்சக்கணக்கான பொதுமக்கள் பயணம் செய்வார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

இதன்மூலம் பொதுமக்கள் பார்வை மெட்ரோ ரெயில் போக்குவரத்து மீது விழும் என்று மெட்ரோ நிர்வாகம் நம்புகிறது.